சுருக்கம்

வணிகவரித்துறை – தமிழ்நாடு வணிகர்நல வாரியம் – குடும்ப நலத்திட்டம் உறுப்பினர்கள் இறந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை ரூ.20000/– லிருந்து ரூ.50000/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை

அரசாணை (2டி) எண்.96 நாள் : 2.07.2007

படிக்கப்பட்டது

தமிழ்நாடு வணிகர்நல வாரிய முதன்மை செயல் அலுவலர் கடித எண். வநவா/203/2007, நாள் 25.04.2007.

–oOo–

ஆணை:

2007–2008ஆம் ஆண்டு வணிகவரிகள் குறித்த மானியக் கோரிக்கையின்போது, வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் இயற்கை மரணம் அடைந்தால் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் குடும்பநல உதவித்தொகையை ரூ.20000/–லிருந்து ரூ.50000/–ஆக உயர்த்தி வழங்கப்படும் என சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

2. பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்கண்ட அறிவிப்பு குறித்து வாரிய முதன்மை செயல் அலுவலர் அவர்கள், கீழ்க்கண்டவாறு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்:-

குடும்பநல நிதி உதவி வழங்கக் கோரும் விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட வரி விதிப்பு அலுவலகம் மூலமாக, 1) உறுப்பினர் சான்று, 2) உறுப்பினரின் இறப்புச் சான்று, 3) உறுப்பினர்களின் வாரிசுச் சான்று, 4) விண்ணப்பதாரரின் வருமானச் சான்று (உரிய வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டது), 5) விண்ணப்பதாரரின் தற்போதைய வருமானம், பொருளாதாரம் மற்றும் வறிய நிலை (விண்ணப்பதாரரின் வருமானம் குறித்து ஆய்வு செய்யும்போது, விண்ணப்பதாரரின் வியாபாரம், பிற வருமானம், போன்றவற்றை கணக்கில் கொண்டு, விண்ணப்பதாரர் வருமான வரி செலுத்தும் அளவிற்கு பொருளாதார நிலை உள்ளவரா?), போன்றவைகள் குறித்து வரிவிதிப்பு அலுவலரால் கூர்ந்தாய்வு செய்து வழங்கப்பட்ட சான்று ஆகியவைகளுடன் உரிய வரி விதிப்பு அலுவலர், விண்ணப்பத்தினை ஆய்வு செய்து, அளித்த பரிந்துரையுடன் பெறப்பட்டு பரிசீலிக்கப்படுகிறது என்றும் மேலும், உறுப்பினர் எவருக்கேனும் இயற்கை மரணம் ஏற்படின் அன்றைய தினத்தில் அவரின் பதிவுச் சான்று நடைமுறையில் இருத்தல் வேண்டும் என்றும் வாரியத்தின் உறுப்பினருக்கு மருத்துவ உதவி திட்டத்தின் கீழ்

உதவித் தொகை ஏதும் வழங்கப்பட்டிருப்பின், பின்னர் அவ்வுறுப்பினருக்கு மரணம் ஏற்படின் அவ்வுறுப்பினரின் வாரிசுதாரர்களுக்கு வாரியத்தின் நிதி நிலையை கருத்தில் கொண்டு குடும்பநல உதவியினை வழங்க இயலாது என்றும் மேற்காணும் நிபந்தனைகளுடன் குடும்பநல நிதி உதவி இதுவரை வழங்கப்பட்டு வருகிறது என்றும் இக்குடும்ப நல நிதியுதவியினை ரூ.20000/–லிருந்து ரூ.50000/– ஆக உயர்த்தினால் சராசரியாக ஆண்டொன்றிற்கு உத்தேசமாக 30 விண்ணப்பங்களுக்கு ரூ.15.00 இலட்சம் செலவாகும் என்றும், இச்செலவினை தற்போது வாரிய கணக்கில் உள்ள இருப்புத் தொகையிலிருந்து வழங்கலாம் என்றும் தெரிவித்தள்ளார்.

**3.** முதன்மை செயல் அலுவலரின் கருத்தினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று, மேலே பத்தி 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுடன், இவ்வரசாணை வெளியிட்ட தேதிக்குப் பின்னர் தமிழ்நாடு வணிகர்நல வாரியத்தில் பதிவு பெற்ற வணிகர் இறக்கும் நேர்வில் அவருடைய வாரிசுதாரர்களிடமிருந்து பெறப்படும் குடும்பநல நிதி உதவி கோரும் விண்ணப்பங்களுக்கு மட்டுமே தற்போது வழங்கப்பட்டு வரும் குடும்ப நல உதவித் தொகையான ரூ.20000/–த்தினை ரூ.50000/– ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது. இந்த ஆணை உடனடியாக அமலுக்கு வருகிறது. இச்செலவினத்தை தமிழ்நாடு வணிகர்நல வாரியம் ஏற்றுக் கொள்ளும்.

**4.** இது குறித்து தொடர் நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைச் செயல் அலுவலர் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். தேவராஜ்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு வணிகர் நல வாரியம், சென்னை–5.
வணிகவரி ஆணையர், சென்னை–5.
மாநிலக்கணக்காயர், சென்னை–6/9/18/35.

நகல்

வணிகவரித்துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதித்துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.